**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 172/2012**

**PROSECUTION WITNESS NO. 11**

| | | |
|---|---|---|
| **Name** : சௌந்தரராசு | | |
| **Father's/Husband Name :** ராமசாமி | **Occupation :** அரசு பணி (ஓய்வு) | |
| **Address** : சேலம் | **Age : 64/2025** | |

**(Accused Present.)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு, சு, நித்தியகுணாளன், பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. ர.நித்யா,** தட்டச்சர்

**<u>C.C.No. 172/2012 10.01.2025</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.56**

**முதல் விசாரணை:**

**1,** நான் தற்போது சேலத்தில் வசித்து வருகிறேன். கடந்த 02.12.2010ம் தேதி நான் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 10.12.2012ம் தேதி மாவட்ட குற்றப் பிரிவு காவல் ஆய்வாளர் கொடுத்த அறிவிப்பை பெற்று வீரசெல்வம் என்பவர் டிராக்டர் TN 49 Q9020 என்ற வாகனத்திற்கு வாகன கடன் வாங்கியிருந்தார். வீரசெல்வம் SBI ல் வாங்கிய கடனிற்கு ரத்து செய்யாமல் ரத்து செய்ததற்கான ஆவணத்தை தயார் செய்து சிட்டி யூனியன் வங்கியில் கடன் பெற்றிருந்தார். என்னிடம் காட்டப்படும் க.எண். 42812/அ3/2009, நாள். 12.2010 தேதியிட்ட கடிதத்துடன் இணைத்து படிவம் 20 மற்றும் 34 பக்கம் 1 முதல் 30 வரை கொண்டது, R. No. 13/225/A1/2008, நாள் 25.03.2008 தேதியிட்ட கோப்பு படிவம் 34 பக்கம் 1 நான் கொடுத்த ஆவணமாகும். அந்த கடிதத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி ஆவணம் அ.சா.ஆ. 23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் 1ம் எதிரி கடனை ரத்து செய்வதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார். வீரசெல்வம் SBI ல் வாங்கிய கடனிற்கு ரத்து செய்யாமல் ரத்து செய்ததற்கான ஆவணத்தை தயார் செய்து சிட்டி யூனியன் வங்கியில் கடன் பெற்றிருந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் எனக்கு தெரியும். என்னுடைய அலுவலக பதிவேட்டில் மேற்படி டிராக்டிருக்கு SBI வங்கியில் கடன் பெற்ற விவரம் மட்டும்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க எவ்வித ஆவணங்களையும் பார்வையிடாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(ஒப்பம்/–திருமதி.எஸ்.சுசிலா),
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.